தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 10

தொலைநிலைக்கல்வித் தேர்வுகள்

தொலைபேசி: 04362-227845

முனைவர் தி .சிவகுமார் 3.06.2020

கூடுதல் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் (பொ)

சுற்றறிக்கை

பொருள்: தொலைநிலைக்கல்வி - இளங்கல்வியியல் பாடப்பிரிவு மே - 2020 தேர்வுகள் – சூலை 2020ல் நடத்துதல் - தொடர்பாக.

தமிழ்ப்பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி வாயிலாகக் கல்வி ஆண்டில் பயிலும் இளங்கல்வியியல் பட்ட மாணவர்களுக்குப் பின்வரும் அட்டவணைப்படி தேர்வுகள் நடைபெறவுள்ளன.

முதலாமாண்டு தேர்வு - கால அட்டவணை (மு.ப.10.00 - 1.00)		
நாள்	தாள் குறியீடு	தாளின் தலைப்பு
20.07.2020	இகஉக 1	அடிப்படைக்கல்வித் தத்துவமும் சமூகவியலும்
21.07.2020	இகஉக 2	கல்வி உளவியல்
22.07.2020	இகஉக 3	கற்றலில் மதிப்பீடு
23.07.2020	இகஉக 4	தகவல் மற்றும் தொடர்பு நுட்பவியல்
24.07.2020	இகஉக 5 தெரிவுப் பாடம்	இகஉக- 5.1 சுற்றுச்சூழல்கல்வி, இகஉக 5.2 வழிகாட்டலும் மற்றும் அறிவுரை பகர்தலும் , இகஉக- 5.3 மனித உரிமைக் கல்வி
25.07.2020	விருப்பப்பாடம் -2 இகஉக 6 (6.1 – 6.5)	இகஉக 6.1 தமிழ் கற்பித்தல், இகஉக 6.2 ஆங்கிலம் கற்பித்தல், இகஉக-6.3 கணிதம் கற்பித்தல், இகஉக-6.4 அறிவியல் கற்பித்தல், இகஉக 6.5 சமூக அறிவியல் கற்பித்தல்.

இரண்டாமாண்டு தேர்வு - கால அட்டவணை (பி.ப.2.00 – 5.00)		
நாள்	தாள் குறியீடு	தாளின் தலைப்பு
20.07.2020	இகஉக 7	கலைத்திட்ட வளர்ச்சி மற்றும் மேம்பாடு
21.07.2020	இகஉக 8	ஆசிரியர் கல்வி
22.07.2020	இகஉக 9	கல்வியியல் நிர்வாகம் மற்றும் மேலாண்மை
23.07.2020	விருப்பப்பாடம் - 2 இகஉக 10 (10.1– 10.5)	இகஉக 10.1 தமிழ் கற்பித்தல் ,இகஉக 10.2 ஆங்கிலம் கற்பித்தல், இகஉக 10.3 கணிதம் கற்பித்தல்,இகஉக 10.4 அறிவியல் கற்பித்தல், இகஉக 10.5 சமூக அறிவியல் கற்பித்தல்.
26.07.2020	இகஉக 11,12	செய்முறை (மு.ப. 10.00 - 05.00) வரை

தேர்வுக் கட்டண விவரம்	முதலாமாண்டு ரூ	இரண்டாமாண்டு ரூ
தேர்வுக்கட்டணம் (தாள் ஒன்றுக்கு ரூ.225/- வீதம் முதலாமாண்டு 6 தாள்கள், இரண்டாமாண்டு 4 தாள்கள்)	1350.00	1900.00 செய்முறைத் தேர்வுக் கட்டணம் உட்பட
இதர கட்டணங்கள்	400.00	1200.00
கூடுதல்	1750.00	3100.00

தேர்வு மையங்கள்

மையக் குறியீடு	தேர்வு மையம்	தேர்வு மைய முகவரி
1.	தஞ்சாவூர்	தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் தொலைபேசி: 04362-227845
2.	மயிலாடுதுறை	பெஸ்ட் கல்வியியல் கல்லூரி, அயூப் அறக்கட்டளை, மெயின்ரோடு, மல்லியம், மயிலாடுதுறை – 609 806. 04364-249115, 9944432652
3.	தருமபுரி	பச்சமுத்து கல்வியியல் கல்லூரி, கிருஷ்ணகிரி மெயின்ரோடு, பழைய தருமபுரி, தருமபுரி - 637 701, 0432 230604
4.	விருதுநகர்	அரசன் கணேசன் கல்வியியல் கல்லூரி, எண் 742, சிவகாசி விருதுநகர் மெயின்ரோடு, திருத்தங்கல்(அ), சிவகாசி 626 130,தொ.பே.04562-220117
5.	சென்னை	லேடி வில்லிங்டன் கல்வியியல் உயராய்வு நிறுவனம் திருவல்லிக்கேணி, சென்னை 044- 28445531
6.	அரக்கோணம்	விவேகானந்தா வித்யாலயா கல்வியியல் கல்லூரி, காவனூர் சாலை, 631 004, அரக்கோணம் வட்டம், வேலூர் மாவட்டம் (04177-293840, 9843871512, 8610790714)

தேர்வுக்கட்டணம் செலுத்த வேண்டிய விவரம்

வ.எண்	விவரம்	நாள்
1.	தேர்வுக்கட்டணம் தாமதக் கட்டணமின்றி செலுத்த கடைசி நாள்	15.06.2020
2	ரூ.500/- தண்டக் கட்டணத்துடன் செலுத்த கடைசி நாள்	24.06.2020

குறிப்பிட்ட காலத்துக்குள் பெறப்படாத விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்கப்பட மாட்டாது.

தேர்வுக்கட்டணத்தை பேங்க் ஆஃப் இந்தியா வங்கிக் கிளை கணக்கு எண்ணில் A/C No.814510110001726) உரிய மஞ்சள் நிற நான்கு படிகள் கொண்ட தேர்வுப் பிரிவு செலுத்துச்சீட்டு வழியோ அல்லது www.tamiluniversitydde.in மூலம் SBI Online Payment வழியோ செலுத்தலாம். விண்ணப்பத்துடன் தேர்வுக்கட்டணம் செலுத்தியதற்கான இரசீது இணைக்கப்பட வேண்டும். ஒருமுறை செலுத்திய தேர்வுக்கட்டணத்தை எந்தவொரு நிலையிலும் மீள வழங்கவோ அடுத்துவரும் தேர்வுக்கு ஈடு செய்து கொள்ளவோ இயலாது. மாணவர்கள் கல்விக் கட்டணம் முழுவதும் கட்டாயமாகச் செலுத்தி இருக்க வேண்டும். ஒரு கல்வியாண்டுக்கான தேர்வுக்கு முதன்முதலில் விண்ணப்பிக்கும்பொழுது அவ்வாண்டின் அனைத்துப் பாடங்களுக்கும் உரிய கட்டணத்துடன் விண்ணப்பிக்க வேண்டும். மாணவர்கள் அவர்கள் பயிலும் கல்வி மையத்திலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள். தேர்வு விண்ணப்பத்தில் பாடக்குறியீட்டு எண்ணைத் தவறாது குறிப்பிடவேண்டும். முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டது, அத்தேர்வர்கள் தேர்வுக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

தேர்வு எழுதுவதற்குத் தனியாள் (Scriber) தேவைப்படும் மாற்றுத்திறன் மாணவர் விண்ணப்பத்துடனேயே தனியாளின் தன்விவரக்குறிப்பு மற்றும் புகைப்படத்துடன் கூடுதல் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் அலுவலகத்திற்கு விண்ணப்பித்து அனுமதி பெறவேண்டும். இவர்களின் கல்வித்தகுதி +2 படிப்பிற்கு மிகாமல் இருக்க வேண்டும். மறுமதிப்பீடு செய்ய தேர்வு முடிவுகள் வெளியான 30 நாட்களுக்குள் விண்ணப்பிக்கலாம். தேர்வு முடிவுகளை www.tamiluniversity.ac.in என்ற இணையதள முகவரியின் மூலம் மாணவர்கள் தெரிந்துகொள்ளலாம்.

3/6/2020

கூடுதல் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் (பொ)

இணைப்பு: தேர்வு விண்ணப்பப் படிவம்

பெறுநர் 1. தேர்வு எழுதும் மாணவர்கள் 2. உரிய தேர்வு மையங்கள்

3/6/20

நகல் 1. துணைவேந்தர் செயலகம் 2. பதிவாளர் செயலகம் 3. இயக்குநர் (தொலைநிலைக்கல்வி இயக்ககம்), 4. துறைத்தலைவர் (கல்வியியல் துறை, த.ப.க) 5. நிதிப்பிரிவு 6. உரிய தேர்வு மையங்கள், 7. மக்கள் தொடர்புப் பிரிவு 8.பொறியியல் பிரிவு, 9.உபரி

ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை